## சாதாரண கூட்டம்

2024-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 30-ம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**திரு.மோ.செல்வராஜ்,**
**தலைவர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

**பொருள் எண் .1**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் ஆகஸ்ட் 2024 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**பொருள் எண். 2**

பள்ளிபாளையம் நகராட்சியில் ஆகஸ்ட் மாதம் **23.08.2024–**ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

**(ரூ. லட்சத்தில்)**

| வ. எண். | வரியின விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 0.00 | 220.95 | 0.00 | 23.48 | 0.00 | 197.47 |
| 2. | காலியிட வரி | 1.80 | 3.99 | 1.49 | 0.87 | 0.31 | 3.13 |
| 3. | தொழில்வரி | 0.83 | 18.09 | 0.83 | 0.88 | 0.00 | 17.22 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 0.00 | 71.47 | 0.00 | 3.50 | 0.00 | 67.97 |
| 5 | வரியில்லா இனம் | 0.00 | 18.29 | 0.00 | 0.01 | 0.00 | 18.28 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0.00 | 35.26 | 0.00 | 2.84 | 0.00 | 44.57 |
| | **மொத்தம்** | 2.63 | 381.86 | 2.32 | 33.24 | 0.31 | 348.64 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1523/2013/அ1

**<u>பொருள் எண்.3</u>**

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சியின் 2023 – 2024 ஆம் ஆண்டுக்கான வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி ஆகிய மூன்று கணக்குகள் தயார் செய்து உள்ளாட்சி நிதித் தணிக்கை ஆய்வுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணியினை தனியார் கணக்கு ஆலோசகர் (Accounts Consultant) விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.1,20,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**<u>பொருள் எண் .4</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் உள்ள பொது சுகாதார கழிப்பிடத்தை ஏலதாரர் ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2027 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளுக்கு கீழ்காணும் இனங்களுக்கு மூன்றாம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒருவரும் முன் வரவில்லை. கீழ்காணும் வகையில் பொது ஏலம் கேட்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏல இன விபரம் | ஏல கேள்வி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.சு.சந்திர சேகரன் | பெரியக்காடு காமராஜ் நகர் (பெண்கள்) கழிப்பிடம் | ரூ.18300 கூடுதல் |
| 2 | திரு.து.கிருஷ்ணகுமார் | பெரியக்காடு காமராஜ் நகர் (பெண்கள்) கழிப்பிடம் | ரூ.18200 குறைவு |

வரிசை எண் 1 இல் உள்ள திரு.சு.சந்திர சேகரன் என்பவரின் உயர்ந்த ஏல கேள்வி தொகை, சென்ற ஆண்டை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும், கேட்கப்பட்டுள்ளதை தொடர்ந்து அன்னாருக்கு ஏலம் விடப்பட்டுள்ளதை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் முடிவு செய்யலாம்.

கோப்பு எண்.1268/2023/அ1

**<u>பொருள் எண்.5</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் உள்ள பொது சுகாதார கழிப்பிடத்தை ஏலதாரர் ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2027 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளுக்கு கீழ்காணும் இனங்களுக்கு மூன்றாம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒருவரும் முன் வரவில்லை.. கீழ்காணும் வகையில் பொது ஏலம் கேட்கப்பட்டுள்ளது

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏல இன விபரம் | ஏல கேள்வி தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி.தி.நாகமணி | ஆர். எஸ். ரோடு கண்ணனூர் மாரியம்மன் கோவில் (பெண்கள்) கழிப்பிடம் | ரூ.39500 கூடுதல் |
| 2 | திரு.நா.திருநாவுக்கரசு | ஆர். எஸ். ரோடு கண்ணனூர் மாரியம்மன் கோவில் (பெண்கள்) கழிப்பிடம் | ரூ.39450 குறைவு |

வரிசை எண் 1 இல் உள்ள திருமதி.தி.நாகமணி என்பவரின் உயர்ந்த ஏல கேள்வி தொகை, சென்ற ஆண்டை விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட கூடுதலாகவும், கேட்கப்பட்டுள்ளதை தொடர்ந்து அன்னாருக்கு ஏலம் விடப்பட்டுள்ளதை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

கோப்பு எண்.**1268/2023/**அ1

## பொருள் எண்.6

பள்ளிபாளையம் நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் கீழ் நகராட்சி 3 பள்ளிகள் மற்றும் ஆலாம்பாளையம் பேரூராட்சி பகுதிகளில் உள்ள 6 பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு பயின்று வரும் 1190 பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சர் காலை உணவு திட்டம் M/s.Sapthagiri Catering Service, Erode என்ற ஒப்பந்ததாரர் பெயரில் கடந்த 29.05.2023 தேதியன்று ஒப்பந்தம் போடப்பட்டு காலை உணவு வழங்கப்பட்டு வரப்படுகிறது. தற்போது ஒப்பந்த காலம் 8/2024 உடன் முடிவுருவதால் மீண்டும் அதே ஒப்பந்ததாரருக்கு 2 மாத காலத்திற்கு (செப்டம்பர் 2024 மற்றும் அக்டோபர் 2024) நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.394/2023/இ1

## பொருள் எண்.7

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 நேரு நகர் மற்றும் வி.ஜ.பி. நகர் பகுதியில் தெருவிளக்கு அமைப்பதற்கு ஒருமுனை மின்இணைப்பும், வார்டு எண் 11 முத்து மாரியம்மன் கோயில் அருகில் புதிதாக தெருவிளக்கு அமைக்க ஒருமுனை மின்இணைப்பும் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1076/2024/இ1

**<u>பொருள் எண்.8</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் சுதந்திர நாள் விழா கொண்டாடுவதற்கு அடிப்படை வசதிகளான சாமியானா, ஒலிபெருக்கி, அழைப்பிதல், இருக்கை வசதி செய்தல் மற்றும் அலங்காரம் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்வதற்கும் ஆகும் தோராய செலவினம் ரூ.40,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1017/2024/இ1

**<u>பொருள் எண்.9</u>**

கூடுதல் இணை இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரையின் படி, நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் ரூ.390.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும் பொருட்டு, அதற்கான Structural Design தயாரித்து, மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் தயார் செய்து TUFIDO நிறுவனத்தில் Appraisal செய்து தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு தனியார் ஆலோசகரை நியமிக்க ஆகும் செலவினம் ரூ.3.90 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1405 /2022/இ1

**<u>பொருள் எண்.10</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் செயல்முறை செ.மு.ஆ.எண்.COLREV/18785/2024/அ5 நாள்.05.08. 2024ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, மாவட்ட ஆட்சியத் தலைவர், நாமக்கல் அலுவலகத்தில் நடைபெறும் சுதந்திர நாள் தினவிழாவிற்கு ஒலிபெருக்கி சாதனங்கள், பதாகைகள், விழாநிகழ்வுகளை புகைப்படம் மற்றும் வீடியோ (Drone Camara உட்பட) எடுப்பதற்கு உத்திரவிடப்பட்டுள்ள பணிகளுக்கு ஆகும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1017/2024/இ1

**<u>பொருள் எண்.11</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அக்ரஹாரம் புதிய தலைமை நீரேற்று நிலையத்தில் 60 எச். பி திறன் கொண்ட மின்மோட்டார் யுனிட் 2 பழுதடைந்துள்ளதால் மின்மோட்டாரை இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது. பொதுமக்களுக்கு தினசரி தடையின்றி குடிநீர் வழங்க 60 எச். பி திறன் கொண்ட மின்மோட்டார் சரிசெய்ய ஆகும் செலவினம் ரூ.1,18,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1071/2024/இ1

**<u>பொருள் எண்.12</u>**

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சி காவிரி கரையோரம் அமைந்துள்ளது. 28.07.2024 அன்று சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவை அடைந்ததையடுத்து, அதன் உபரி நீர் முழுவதுமாக வெளியேற்றப்பட்டதால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக காவிரி ஆற்றின் கரையோர பகுதிகளில் வசித்து வந்த பொதுமக்கள் பாதுகாப்பான முகாம்களுக்கு அழைத்து செல்லப்பட்டு தங்க வைக்கப்பட்டனர். மேலும், காவிரி ஆற்றின் அருகே பொதுமக்கள் யாரும் செல்லாத வகையில் விழிப்புணர்வு பதாகைகள், ஒலிபெருக்கி விழிப்புணர்வு கரையோர தடுப்புகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் நேரடி அறிவுரை நாள். 28.07.2024 மற்றும் வருவாய் கோட்டாட்சியர், திருச்செங்கோடு அவர்களின் ஆய்வு கூட்டம் நாள்.29.07.2024 அவர்களால் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, பள்ளிபாளையம் நகராட்சி மூலம் முகாம்களில் தங்கவைக்கப்பட்ட பொதுமக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு பொதுமக்கள் பாதுகாக்கப்பட்டனர். இதன் அடிப்படையில் கீழ்கண்ட இடங்களின் தடுப்புகள் அமைக்கப்பட்டு, விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டு, ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு வழங்கப்பட்டதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.2,90,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. நாட்டாகவுண்டன்புதூர் துவக்கப்பள்ளி வார்டு எண் 1
2. ஓங்காளியம்மன் கோவில் படித்துறை வார்டு எண் 4
3. ஓங்காளியம்மன் கோவில் செங்குந்தர் மண்டபம் வார்டு எண் 4
4. புதன் சந்தை இறக்கம் வார்டு எண் 4
5. நாட்டாகவுண்டன்புதூர் புத்து கோவில் படித்துறை வார்டு எண் 4
6. சத்யா நகர் வார்டு எண் 4
7. ஜனதா நகர் வார்டு எண் 19
8. பெரியார் நகர் வார்டு எண் 20

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

கோப்பு எண்.981/2024/இ1

**<u>பொருள் எண்.13</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் தேசிய நெடுஞ்சாலைத்துறையினர் மூலமாக சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டத்தில் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பாலத்திற்கு என அமைக்கப்பட்டுள்ள கான்கீரிட் தூண்களுக்கு இடையே ஈரோடு சாலையில் பாலம் துவங்கும் இடத்தில் உள்ள காலியிடத்தினை நகராட்சி பயன்படுத்தி கொள்ள நெடுஞ்சாலைத்துறையினர் அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து அவ்விடத்தில் பொதுக்கழிப்பிடம் ஒன்று கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்புவதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1037/2024/இ1

**பொருள் எண்.14**

பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண் டி.எண்.34 AY 0875 மினி ஆட்டோ வாகனத்திற்கு வருடந்தோறும் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டுக்கு செலுத்தப்பட்ட காப்பீட்டுக்கான காலக்கெடு வருகின்ற 31.08.2024–ந் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே எதிர்வரும் காலங்களில் வாகனத்தை தொடர்ந்து இயக்குவதற்கு உரிய காப்பீடுத் தொகைகான ரூ.19386/– செலுத்துமாறு M/s. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகையான ரூ.19386/– ஐ நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதி வழங்காலம்.
2. பொதுசுகாதார வாகனம் எண் டி.எண்.34 AY 0875 மினி ஆட்டோ வாகனத்திற்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.19386/– ஐ M/s. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு, நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1087/2024/எச்1

**பொருள் எண்.15**

நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை- 28 அவர்களின் கடித. ந.க.எண்.34638/2022/இஎ2 SWM-9 நாள்.10.01.2023 –ன் படியும், இவ்வலுவலக உத்திரவு ந.க.எண்.1008/2022/இ1 நாள்.31.08.2023 – ன் படியும், இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து பொதுசுகாதார பணிகளையும் வெளிக்கொணர்வு முறையில் 01.09.2023 முதல் 31.08.2024 முடிய ஒராண்டு காலத்திற்கு பணிகளை மேற்கொள்ள உரிய நிறுவனமான M/s.ஜிஎஸ்சி டெக்னாலஜி & சர்வீஸஸ் 39டி, கொமரபாளையம் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி உத்திரவு 31.08.2024–ந் தேதியுடன் முடிவடைகின்றது. மீண்டும் 01.09.2024 முதல் 31.08.2025 வரை ஒராண்டு காலம் கால நீட்டிப்பு செய்யவும், ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பணி செய்ய, மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1008/2022/இ1

**பொருள் எண்.16**

பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண் டி.எண்.34 R 4132 கழிவுநீர் உறிஞ்சும் வாகனத்திற்கு வருடந்தோறும் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டுக்கு செலுத்தப்பட்ட காப்பீட்டுக்கான காலக்கெடு வருகின்ற 31.08.2024–ந் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே எதிர்வரும் காலங்களில் வாகனத்தை தொடர்ந்து இயக்குவதற்கு உரிய காப்பீடுத் தொகைகான ரூ.33372/– செலுத்துமாறு M/s. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற பட்டியல் ெ தாகையான ரூ.33372/– ஐ

நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதி வழங்காலம்.
2. பொதுசுகாதார வாகனம் எண் டி.எண்.34 R 4132 கழிவுநீர் உறிஞ்சும் வாகனத்திற்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.33372/– ஐ M/s. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு, நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1086/2024/எச்1

**பொருள் எண்.17**

பொதுசுகாதாரம் டெங்கு, சிக்குன்குனியா,லெப்டோபைரோஸ் போன்ற நோய்களை பரப்பும் ஏடிஎஸ் முதிர்கொசுக்கள் மற்றும் மழைநீர் வடிகால்களில் வசிக்கும் க்யூலக்ஸ் வகை முதிர்க்கொசுக்களை, கட்டுபடுத்ததும் பணிக்கு பைரத்திரம் 2% எக்ஸ்ராக்ட் மருந்து பயன்படுத்தபடுகிறது. இயக்குனர், தமிழ்நாடு மருந்து கட்டுபாட்டுக்கழகம் சென்னை அவர்களின் கடித எண்.e-010/M(P) INSECT/LARVI/TNMSC/2023 நாள்.28.02.2024–ல் பரிந்துரைக்கப்பட்ட பைரத்தினம் 2% எக்ஸ்ராக்ட் மருந்து லிட்டர் 1–ன் விலை ரூ.844/–ம் மற்றும் GST 18% தொகையான ரூ.151.92/–ஐ சேர்த்து மொத்தம் ரூ.995.92/–ஆகும் எனவே பொதுசுகாதார பணிக்கு தேவையான பைரத்தினம் 2% எக்ஸ்ராக்ட் மருந்து 400 லிட்டர் ரூ.3,98,368/–க்கு கொள்முதல் செய்யவும், இம்மருந்தினை கொள்முதல் செய்ய முழு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/s.AGRI BIO - TECH INTERNATIONAL LIMITED, KOLKATA நிறுவனத்தின் ஏரியா விநியோகஸ்தர் அங்கீகாரம் பெற்ற M/s.SUN PLUS PRODUCTS 129,குருசாமி கொத்தனார் வீதி, விருதுநகர் என்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்புஎண்.1085/2024/எச்1

**பொருள் எண்.18**

பொதுசுகாதாரம் டெங்கு, சிக்குன்குனியா,லெப்டோபைரோஸ் போன்ற நோய்களை பரப்பும் ஏடிஎஸ் கொசுப்புழுக்கள் மற்றும் மழைநீர் வடிகால்களில் வசிக்கும் க்யூலக்ஸ் வகை கொசுப்புழுக்களை, கட்டுபடுத்ததும் பணிக்கு பாசில்லஸ் துரின்ஞ்ன்சிஸ் மருந்து பயன்படுத்தபடுகிறது. இயக்குனர், தமிழ்நாடு மருந்து கட்டுபாட்டுக்கழகம் சென்னை அவர்களின் கடித எண்.e-010/M(P) INSECT/LARVI/TNMSC/2023 நாள்.28.02.2024–ல் பரிந்துரைக்கப்பட்ட பாசில்லஸ் துரின்ஞ்ன்சிஸ் மருந்து லிட்டர் 1–ன் விலை ரூ.1109.82/–ம் மற்றும் GST 12% தொகையான ரூ.133.18/–ஐ சேர்த்து மொத்தம் ரூ.1243/–ஆகும் எனவே பொதுசுகாதார பணிக்கு தேவையான பாசில்லஸ் துரின்ஞ்ன்சிஸ் மருந்து 350 லிட்டர் ரூ.4,35,050/–க்கு கொள்முதல் செய்யவும், இம்மருந்தினை கொள்முதல் செய்ய முழு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/s.BIO TECH INTERNATIONAL LIMITED, NEW DELHI நிறுவனத்தின் ஏரியா விநியோகஸ்தர் அங்கீகாரம் பெற்ற M/s.SUN PLUS PRODUCTS 129,குருசாமி கொத்தனார் வீதி, விருதுநகர் என்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1084/2024/எச்1

**<u>பொருள் எண்.19</u>**

பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகனம் எண் டி.எண்.34 R 7644 டிப்பர் லாரி வாகனத்திற்கு வருடந்தோறும் இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டுக்கு செலுத்தப்பட்ட காப்பீட்டுக்கான காலக்கெடு வருகின்ற 31.08.2024–ந் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே எதிர்வரும் காலங்களில் வாகனத்தை தொடர்ந்து இயக்குவதற்கு உரிய காப்பீடுத் தொகைகான ரூ.32764/– செலுத்துமாறு M/s. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகையான ரூ.32764/– ஐ நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதி வழங்காலம்.
2. பொதுசுகாதார வாகனம் எண் டி.எண்.34 R 7644 டிப்பர் லாரி வாகனத்திற்கு இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையான ரூ.32764/– ஐ M/s. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு, நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1083/2024/எச்1

**<u>பொருள் எண்.20</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஜே.சி.பி. வாகனம் எண் TN34 R0381 கடந்த 2013 ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு பொதுசுகாதாரம் மற்றும் குடிநீர் பிரிவு பணிகளுக்கு என பயன்படுத்தப்பட்டு வந்தது. இவ்வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு சுமார் 11 ஆண்டுகளுக்கு மேல் ஆன காரணத்தினால் அடிக்கடி வாகனத்தில் ஏற்பட்டு வரும் பழுதுகளை சரிசெய்வதற்கான செலவினம் அதிக அளவில் ஏற்பட்டது. இதன் காரணமாக 15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் புதிய ஜே.சி.பி.வாகனம் ஒன்று 26.07.2024 தேதி கொள்முதல் செய்யப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. புதிய ஜே.சி.பி.வாகனம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதால் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வந்த ஜே.சி.பி வாகனத்தினை பயன்பாட்டில் வைக்கப்படாமல் இருக்கும் பட்சத்தில் வாகனம் முற்றிலுமாக சேதமடைந்து மீண்டும் வாகனத்தை பயன்படுத்த இயலாத சூழ்நிலைக்கு செல்ல நேரிடும். எனவே இப்பழைய ஜே.சி.பி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பட்சத்தில், இவ்வாகனத்தினை தேவைப்படும் தனியார் பணிகளுக்கு நாள் வாடகைக்கு விடுவதால் நகராட்சிக்கு வருமானம் வருவதுடன், வாகனமும் பயன்பாட்டில் இருந்து வரும். தனியார் ஜே.சி.பி. வாகனங்கள் ஒரு மணி நேர வாடகையாக நிர்ணயம் செய்துள்ள ரூ.1500/- ஐ விட வாடகையினை குறைத்து ஒரு மணி நேர வாடகையாக ரூ.1000/- என நிர்ணயிக்கும் பட்சத்தில் அதிக அளவில் தனியார் பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்படுவதுடன், வாகனத்திற்கான பராமரிப்பு செலவு மற்றும் எரிபொருள் செலவுகளை ஈடு செய்து நகராட்சிக்கு வருவாய் ஈட்டப்படும் என்பதால் பழுதுகளை சரிசெய்ய உள்ளூர் விலைப்புள்ளிகளை பெற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1090/2024/இ1

**<u>பொருள் எண்.21</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நவீன மீன் விற்பனை அங்காடி அமைப்பதற்கு வாடகை அடிப்படையில் தற்காலிகமாக காலியிடம் வேண்டி, உதவி இயக்குநர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, மேட்டூர் அணை அவர்களிடம் இருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண்.40/ஆ/2020 நாள்.07.06.2024 ன் அடிப்படையில் திருச்செங்கோடு சாலையில் உயர்மட்ட மேம்பாலப் பணியின் காரணமாக நெடுஞ்சாலைத்துறையினர் மூலம் இடிக்கப்பட்ட நகராட்சி வணிக வளாகம் இருந்த காலியிடத்தில் மீன்விற்பனை அங்காடி அமைப்பதற்கு முன்வைப்புத் தொகை (Deposit) மற்றும் 11 மாத வாடகை பெற்ற பின்னரே 11 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நகராட்சி காலியிடம் வாடகைக்கு விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.689/2024/அ1